# INFLUENCE OF NINE PLANETS ON AUDITOR'S HOROSCOPES

## கணக்குத் தணிக்கையாளர்கள் சாதகங்களில் ஒன்பது கோள்களின் தாக்கம்

A THESIS

*Submitted by*

**M.B. SUNDAR**
**(Reg. No.D 15 AS 512)**

*in partial fulfillment for the award of the degree*

*of*

**DOCTOR OF PHILOSOPHY**




**DEPARTMENT OF ASTRO SCIENCE**

**FACULTY OF ARTS AND SCIENCE**

**BHARATH INSTITUTE OF HIGHER EDUCATION AND RESEARCH**

**CHENNAI 600 073.**

**DECEMBER 2019**

# DECLARATION

I declare that this dissertation titled "**INFLUENCE OF NINE PLANETS ON AUDITOR'S HOROSCOPES**" is an original and bonafide work done by my own in the partial fulfillment of the requirement for the award of the degree of **Doctor of Philosophy** and submitted to the **Department of Astrology, Faculty of Arts and Science**, Bharath Institute of Higher Education and Research, was carried out under the supervision of **Dr. N. Dhamodaran, MA., M.A., M.A., M.A., (Astrology) M.Phil., Ph.D.,** Visiting Professor, Department of Astrology, Faculty of Arts and Science, Bharath Institute of Higher Education and Research, is entirely original and has not been submitted for any degree or diploma earlier.

I further declare that this thesis does not form of any other thesis or dissertations on the basis of which a degree was awarded or conferred on earlier occasion on me or any other candidate.

Place:

Date: **Signature of the Scholar**

# BONAFIDE CERTIFICATE

Certified that this thesis titled "**INFLUENCE OF NINE PLANETS ON AUDITOR'S HOROSCOPES**" is the bonafide work of **Mr. M.B. SUNDAR, REGISTER (No.D15AS512)** who carried out the research under my supervision.

**Certified further, that to the best of my knowledge the work reported and in the publications by the scholar does not form part of any other thesis or dissertation, on the basis of which a degree or award was conferred on an earlier occasion of thesis of any other candidate.**

**SUPERVISOR**

Signature of the Supervisor with official Seal

**JOINT-SUPERVISOR**
(if any)

Signature of the Supervisor with official Seal

## சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | |
|---|---|
| பக். | : பக்கங்கள் |
| மேலது | : மேலே சுட்டியது |
| கு | : குரு |
| கே | : கேது |
| ச | : சந்திரன் |
| சு | : சுக்கிரன் |
| சூ | : சூரியன் |
| செ | : செவ்வாய் |
| பு | : புதன் |
| ரா | : இராகு |
| ல | : இலக்கினம் |
| A. P. | : Art of Predictions |
| D. A. | : Dictionery of Astrology |
| M. P. | : Matheswara Phala Dheepika |
| P. A. | : Practical Astrology |
| P. A. | : Predictive Astrology |

## பொருளடக்கம்

## அட்டவணைப் பட்டியல்

## வரைபடப் பட்டியல்

## முன்னுரை

பண்டையக் காலத்தில் சமுதாய வாழ்வு முறை கற்றுத் தரப்பட்டது. மனிதன் தோன்றி வாழத் தொடங்கிய நாளிலிருந்து கற்பித்தல் தொடங்கியது. மனிதன் மதக்கோட்பாடுகள், பிற கலைகளும் கற்றுக் கொண்டான். அக்காலத்தில் நெறிமுறைப்படுத்தப்பட்ட கல்வி முறை இல்லை.

மனிதனின் அறிவு வளர, வளரப் பல்வேறு கலைகளில் ஆர்வம் ஏற்பட்டது. அதுபோல வணிகத் தொடர்புகளும் வைத்துக் கொள்ள முற்பட்டனர். வரிவடிவம் தோன்றாத காலகட்டத்தில் கற்பித்தல் என்பது பேச்சு மொழியாகவே இருந்தது. வரி வடிவம், எழுத்துக்கலை வளர்ந்தபின், சிறு சிறு குழுக்களாக இருந்த மனித சமுதாயம் பெருகி, குழுக்களின் தலைவனாக அரசனும், இராச குருவும் நியமிக்கப்பட்டனர். அரசகுடும்பம் இராச குருவிடம் ‘குருகுலம்’ என்ற பெயரில் வேதம் பயில அனுப்பி வைக்கப்பட்டனர்.

பிற கலைகளான வணிகம், கணிதம், தத்துவம், அறிவியல், மருத்துவம், இலக்கணம் போன்றவையும் கற்றுத் தரப்பட்டது. குருவின் வீட்டில் தங்கி இருந்து பாடங்கள் கற்றுக் கொள்ளப்பட்டது. கிமு. 500ல் மாற்றம் ஏற்பட்டு குருவுடன் மாணவர்கள் பல இடங்களுக்குப் பயணப்பட்டு அனுபவ பாடத்தை அறிந்து கொள்ள முற்பட்டனர். கிமு. 561ல் கன்பியூஸியஸ் என்பவர் இந்தக் குருகுல முறையை மறுத்து குருவுக்கு பணிவிடை செய்வதாக அவருடன் சேர்ந்து பல இடங்களுக்குச் சென்று தான் ஆர்வத்துடன் கற்றுக் கொண்டு, தான்பெற்ற அறிவைப் பிறருக்கும் கற்றுக் கொடுத்தார். இவர்தான் முதல் தனித்து இயங்கிய கணிதவியல் வல்லுநராகக் கருதப்படுகிறார்.

கால வளர்ச்சியால் 5ஆம் நூற்றாண்டில் முதன் முதலில் தட்சசீலம் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. பின்னர் நாலந்தா, உஜ்ஜயினி பல்கலைக்கழகங்கள் தோன்றின. அந்தக் கால கட்டத்தில் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பாடசாலை மாணவர்களுக்கு அமைக்கப்பட்டது. அங்கு வந்து கணித வல்லுநர்கள் மாணவர்களுக்குப் பாடம் பயிற்றுவித்தனர். அங்கு அனைவரும் கல்வி கற்க வாய்ப்பு தரப்பட்டது.

# இயல் - 1



**சோதிடம் பற்றிய விளக்கமும், சோதிட வரலாறும், தணிக்கையாளர் பற்றிய விளக்கமும**

## *இயல் - 1*

## *சோதிடமும், தணிக்கையியல் தோன்றிய வரலாறும்*

### *1.0. அறிமுகவுரை*

இவ்வியலில் சோதிடம் பற்றிய விளக்கமும், சோதிவியலின் வரலாறும், தணிக்கையாளர் பற்றிய விளக்கமும், நவக்கோள்களின் காரகத்துவமும் பற்றி விரிவாக அறியப்பட உள்ளது. ஒன்பது கோள்களும் தணிக்கையாளர் பணிக்கு தாக்கத்தை தருகின்றன. எனினும் தணிக்கையாளர் பணியில் புதன், சனி. சூரியன், குரு, ஆகிய கோள்கள் கணித அறிவையும், அந்த கணித அறிவை பயன்படுத்தக்கூடிய அறிவையும் தருகின்றன. அவை ஜென்மஸ்தானமான பாவகமான இலக்கினத்திலும், கடன், வேலை, பணியாட்கள் ஆகியவற்றின் இடமான ஆறிலும், ஜீவன, கர்மஸ்தானமான பத்திலும் அமைவதால் ஏற்படும் அமைப்பு பற்றி அறியப்பட்டு உள்ளது.

### *1.1. சோதிடம் - ஒரு விளக்கம்*

சோதிடம் என்பது ஒருவரின் வாழ்க்கையை பற்றி விளக்கமாக முன்னதாகவே கூறும் ஒரு சாத்திரம் ஆகும். கணித சாத்திரம் இதன் அடிப்படையாகும். இராசி மண்டலத்தில் உட்பட்டு இருக்கும் 9 கோள்கள் யாவும் அவைகளின் அசைவுகளின் காரணமாய் இருக்கக் கூடிய இடத்திற்கும், அவற்றின் சக்திக்கும் தகுந்தவாறு உயிரினங்களின் உயிர் வாழ்க்கைக்கு அந்தந்த கோள்களுக்கு குறிப்பிட்டுள்ள காரகத்துவத்துக்கும், பாவகத்திற்கும் சில சக்திகளைப் பிறக்கும் சமயம் கொடுக்கின்றது. இவைகள் யாவற்றையும் மற்றும் ஒவ்வொரு அம்சங்களையும் கணிதம்மூலமாக நன்கு ஆராய்வதுதான் சாதகக் கணிதம் ஆகும்.

மனிதன் தன் பரம்பரை மற்றும் வளரும் சூழ்நிலைகளால் கட்டுப்படுத்துவதாக சொல்வதுண்டு. ஆனால் சோதிட சாத்திரம் அவன் பிறக்கும் போதுள்ள கோள்கள் நிலைகளால் கட்டுப்படுத்துவதாகக் கூறப்படுகிறது. இந்தக் கோள்களே நமது வாழ்வின்

அடிப்படை சக்திகள். இவற்றோடு நட்சத்திரம், இராசி, பாவங்கள் போன்ற அனைத்தும் தொடர்பு பெறுகின்றன.

ஒருவருடைய சாதகத்தில் 10ஆம் வீட்டை வைத்துதான் அவருடைய தொழில் நிர்ணயம் செய்யப்படுகிறது. தனஸ்தானம் எனப்படும் 2ஆம் வீட்டதிபதி, இலாபஸ்தானம் எனப்படும் 11ஆம் வீட்டதிபதி இவர்கள் பலம் பெற்று இருந்தாலும் செய்யும் தொழிலில் முன்னேற்றமடைந்து செல்வந்தராக இருக்கும் யோகம் ஏற்படுகிறது.

சகுனத்தின் அடிப்படையில் தொடக்கமான எதிர்காலப் பலன் கூறும் முறை, கால முன்னேற்றத்தின் அடிப்படையில் வானசாத்திரம் முதலில் வளர்ச்சி பெற்றுப் பின்னர் அது சோதிடவியலாக உருமாறியது. இந்த உருமாற்றம் மேல்நாட்டுச் சோதிடத்தில் மெசபடோமியா, பாபிலோனியா, சால்தியா, கிரேக்கம், எகிப்து, சீனா, அரேபியா போன்ற நாடுகளின் வானசாத்திர வளர்ச்சியும் அத்துடனான சோதிட சாத்திர வளர்ச்சியும் காணப்படுகிறது.

சோதிடவியலின் அடிப்படை உண்மைகள் முற்காலம், தற்கால வளர்ச்சி பெற்ற நிலையில் உள்ள கோட்பாடுகளேயாகும். இக் கோட்பாடுகளின்படி முற்றுப்பெற்ற சோதிடப்பலன்கள் கூறப்படுகிறது.

இந்தியாவில் மட்டுமல்லாது காலத்தைக் கணக்கிடும் முறைமை உலக இனங்கள் பலவற்றிலும் காணப்பட்டது. உலகம் முழுமையும் காணப்படும் நாகரீகங்களை ஒன்பது பிரிவுகளாக இன விரைவியலாளர்கள் பகுப்பர். அவை :

1. எகிப்திய நாகரீகம்
2. மெசபடோமிய நாகரீகங்கள்
   * சுமேரிய நாகரிகம் * பாபிலோனிய நாகரீகம் * அசீரிய நாகரீகம்
   * சால்டிய நாகரீகம்
3. பாரசீக நாகரீகம்
4. யூத நாகரீகம்
5. இந்திய நாகரீகங்கள்

* சிந்து சமவெளி நாகரீகம் * திராவிட நாகரீகம் * இந்தோ ஆரிய நாகரீகம்

6. சீன நாகரீகம்

7. அமெரிக்க நாகரீகங்கள்

* மாயர் நாகரீகம் * அஸ்டெக் நாகரீகம் * இன்கா நாகரீகம்

8. கிரேக்க நாகரீகங்கள்

* ஹெல்லனிக் நாகரீகம் * ஹெல்லஸ்டினிக் நாகரீகம்

9. உரோமானிய நாகரீகம்

மேற்குறித்துள்ள நாகரீகங்கள் பலவும் வானவியலைப் பல்வேறு கதைப்பாடல்களின் வழியாகவும், கணக்கீடுகள் வழியாகவும் அர்தப்படுத்திக் கொள்ள முயன்றுள்ளன. இவையே சோதிடத்தின் உலக அளவிலான தோற்றுவாய். உலக செவ்விலக்கியங்களில் செல்நெறியானது காலக்கணிப்பு, குறிசொல்லுதல், தீர்க்கதரிசன நிறைவேற்றம் என்பதை மையமாக வைத்தே கட்டமைக்கப்பட்டுள்ளது.

## *1.2. தணிக்கையாளர் - விளக்கம்*

இக்காலத்தில் பலவிதமான தொழில்கள் பல்கிப் பெருகியுள்ளன. அவற்றில் சில தொழில்களுக்கு மட்டுமே மக்களிடையே பெருத்த ஆதரவு உள்ளது. அவற்றில் ஒன்றாக மக்களால் பெரிதும் விரும்பப்படுவது தணிக்கையாளர் தொழில். நிறைந்த வருமானத்தையும் சமூகத்தில் மரியாதையையும், அந்தஸ்தையும் கொடுக்கக்கூடிய ஒரு சிறந்த பணி.

கணக்கு தணிக்கையாளர் எனப்படுபவர் அரசு மற்றும் தனியார் துறைகளின் ஆண்டு வரவு மற்றும் செலவுகளைக் குறித்த பட்டியல்களை தணிக்கை செய்பவர் ஆவார். இந்தப் பணிக்கான கல்வி வணிகவியல் இளங்கலைப் படிப்பு அடிப்படைத் தகுதியாகும். அதன் பின்னர் சி.ஏ (CA) எனப்படும் தணிக்கையாளருக்கான சிறப்பு கல்வியாகும்.

***தணிக்கையாளர் - ஓர் அறிமுகம்***

கௌடில்யர் கி.பி. 4ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். இவர் ஒரு பொருளாதார நிபுணர். ‘அர்த்தசாஸ்திரம்’ என்னும் நூலை எழுதியவர். ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு Efficient allocation of resources – நாட்டின் வளத்தை திறமையாக பங்கிடுதல் - பிரித்துக் கொடுத்தல் மிக முக்கியமான ஒன்று. அது போல வழிநடத்துவதற்கு பொருளாதாரச் செயல்பாடு மிக மிக அவசியம் என்பதை உணர்ந்து ‘அர்த்தசாத்திரம்’ என்ற நூலை எழுதினார். அதில் ‘கணக்கு வைப்பு முறை’யைப் (Book Keeping) பற்றி அவர் எழுதியது மிக மிக முக்கியமாக கருதப்பட்டது. கணக்கு வைப்பு முறை, தொழில் தர்ம நெறியில்தான் இயங்க வேண்டும் என கூறினார். அவர் 2 முக்கிய துறைகளைப் பிரித்தெடுத்தார். 1. காசாளர் (Tresurer) 2. கணக்குத் தணிக்கையாளர் (Comptroller Auditor).

தொழில் தர்மம் மட்டுமே பொருளாதார முன்னேற்றத்தையும், மக்களையும் இணைக்கும் பாலம் என்று கூறினார். அர்த்த சாத்திரம் 3 பாகங்களைக் கொண்டது. முதல் பாகத்தில் வெளியுறவுத் துறையைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. 2ஆவது பாகத்தில் நீதித்துறை, சட்ட ஒழுங்கு முறை சம்பந்தப்பட்டது. 3ஆவது பாகம் பொருளாதார முன்னேற்றம், வரிவிதிப்பு, தொழிலாளர் மற்றம் பண நிர்வாகம் பற்றிக் கூறுகிறது. இந்த 3ஆம் பாகத்தில் கணக்கு வைப்பு முறையைப் பற்றி அவர் விவரித்திருக்கிறார். நாட்டை ஆளும் அரசனுக்கு எல்லாக் காலகட்டங்களிலும் இராச நீதியை உணர்த்துவதாக அர்த்த சாத்திரம் அமைந்துள்ளது.

கணக்குத் துறைக்கு 4 விதமான முக்கியப் பணிகளைச் செய்தார்.

- அடிப்படை மூலக் கோட்பாடுகளை செயல்முறைக் கொள்கைகளை வரையறுத்தார்.

- கணக்கு வைப்பு முறையின் நோக்கம், இலக்கு, ஆராய்ச்சி முறைகளை இயற்றினார்.
- நாட்டுப் பொருள் வருவாய்த்துறை விதிமுறைகளை தொகுத்து, முரண்பாடுகளை சீராக்கினார்.
- மோசடி கணக்கெழுதுவதை தடுக்கக் கணக்கர்களின் ஒழுக்க நியதியின் பங்கை எடுத்துரைத்தார்.

பின்பற்ற தகுந்த சீரான பொருளாதாரத்திற்கும், அப்போது 4ம் நூற்றாண்டில் உள்ள உண்மை பொருளாதார நிலைக்கும் பெரிய இடைவெளி இருந்ததை மனத்தில் கொண்டு இந்த இடைவெளியின்மூலம் ஏற்பட இருக்கும் பல பிரச்சினைகளை தொலைதூர நோக்கின்மூலம் கணித்து அதைப் போக்குவதற்கான வழிமுறைகளை, விதிமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்தது அவரது நிபுணத்துவத்தைக் காட்டுகிறது.

நாட்டு தேசிய வளம், நீதித்துறை, சட்ட ஒழுங்கு, தேசிய பாதுகாப்பு இவைகளை மேம்படுத்துவது ஓர் அரசின் தலையாய கடமையாகும். இந்த இலக்குகளை அடையக் கௌடில்யர் தனி வழிமுறைகளை வகுத்தார். அவை இன்றைய காலக்கட்டத்தில் கூட நடைமுறைக்கு ஒத்து இருக்கிறது. அதுவே அர்த்தசாஸ்திரத்தின் தனித்தன்மை ஆகும்.

### *வணிகம் என்பதன் பொருள்*

வணிகம் என்பது வியாபாரம் ஆகும். அதாவது பொருளை வாங்குதலும், விற்றலும் ஆகும். அதனைச் சார்ந்த துணைப் பணிகளும் வணிகத்தைச் சார்ந்தது.

### *பண்டமாற்று முறையின் விளக்கம்*

பணம் என்ற கண்டறிவதற்கு முன்பு ஒரு பொருள் மற்றொரு பொருளுக்கு மாற்றாக வழங்கப்பட்டு வந்துள்ளது. இதுவே பண்டமாற்றம் அல்லது பண்ட மாற்று வணிகம் எனப்படும். பணம் கண்டுபிடிக்கப்பட்ட பின்னர் பண்டமாற்று முறை மறையத் தொடங்கியது.

***வணிகம்***

தேவைப்படும் பொருள்களை உற்பத்தியாகும் இடத்திலிருந்து பெற்று பல்வேறு இடங்களுக்குக் கொண்டு சென்று வியாபார நடைமுறைப் பணிகளுக்குரிய செயல்பாடுகளை மேற்கொள்வதற்கு வணிகம் என்று பெயர். இந்த வணிகம் என்பது வியாபாரம் மற்றும் அதன் துணைப்பணிகளையும் உள்ளடக்கியதாகும். வியாபாரத்தின் துணைப்பணிகள் என்பவை போக்குவரத்து, வங்கி, காப்பீடு, பண்டகசாலை, விளம்பரம் மற்றும் தகவல் தொடர்பு போன்றவற்றின் செயல்களையும் குறிப்பவையாகும். பொதுவாக வணிகம் என்பது பணம் செலுத்திப் பொருட்களின் பரிமாற்றத்தையும், அவற்றின் தொடர்பாக நடைபெறும் பணிகளையும் குறிக்கக்கூடிய ஒன்றாகும். பொருளாதார நடைமுறைப் பணிகளோடு தொடர்புடைய உற்பத்தி, பரிமாற்றம், விநியோகம், பொருட்கள் மற்றும் சேவைகளின் நுகர்வு தொடர்பான பணிகளை மேற்கொள்ளும் துறையே வணிகம் எனப்படும்.

***வணிகம் - வரைவிலக்கணம்***

பொருட்களின் பரிமாற்றத்தின் பொழுது உருவாகும் ஆள்சார்தடை, இடத்தடை, காலத்தடை போன்றவற்றை அகற்றும் நடைமுறை செயல்களில் ஈடுபட்டு மேற்கொள்ளும் எல்லாக் கூட்டுச் செயல்களை வணிகம் என்பர். இது ஜே. ஸ்டீபன்சன் கருத்தாகும்.

***வணிகவியல்***

வணிகவியல் என்பது வணிகத்தின் ஒரு பகுதியாகக் கருதப்படுவதே வியாபாரம். வணிகம் மற்றும் வியாபாரம் என்ற சொல் ஒன்றினையே குறிக்கும் என்று சிலர் கூறுகின்றனர். ஆனால் அது உண்மையன்று. பொருளாதார நடைமுறைகள், பொருட்கள் மற்றும் சேவைகளின் பரிமாற்றம், பலன் பெறும் நோக்கம், பயன்பாடுகளை தோற்றுவித்தல், வணிக நடவடிக்கை ஒழுங்கு ஆகிய பல்வேறு வகையான வணிக நடவடிக்கைகளைப் பற்றி அறிந்து கொள்ள உதவும் நூலே வணிகவியல் ஆகும்.

## *1.3. கோள்களின் காரகத்துவம் பற்றிய விளக்கம்*

கணக்குத் தணிக்கையாளர்களின் சாதகங்களில் புதன், சனி, குரு மற்றும் சூரியனின் நிலையுமே தீர்மானிக்கின்றன. இவ்வியலில் இக்காரகக் கோள்களின் காரகத்துவம் பற்றி விரிவாக அறியப்பட்டுள்ளது. எனினும் தணிக்கைத் தொழிலுக்கான நிபுணத்துவத்தை புதனும், தணிக்கை அறிவை குருவும், காரக புருட தத்துவப்படி பத்தாமிடக் கோளான சனியும், தணிக்கையியல் என்பது அரசு மற்றும் அரசு சார்ந்த பணியாக இருப்பதால் சூரியனும் காரகக் கோள்களான அறியப்பட்டுள்ளன. இக் கோள்களின் காரகத்துவ குணங்களில் தணிக்கை பற்றிய குணமும் காணப்படுகின்றது. எனவே இக் கோள்களின் காரகத்துவ குணங்கள் தரப்பட்டுள்ளன.

### *1.3.1. புதனின் காரகத்துவம்*

அம்மான், கல்வி, ஞானம், விஷ்ணு, வைசியன், **கணக்கன்,** தனாதிபதி, தூதுவன், தேர்ப்பாகன், வாக்கு சாதுர்யம், கதை, சங்கீதம், சோதிடம், பிரசங்கம், காவியம், உபாசனை, யுக்தி, சத்திய வசனம், வைஷ்ணவகர்மம், வியாபாரங்கள், லிகிதத் தொழில், சிற்பத்தொழில், அலி, தேர், தாதன், அந்தரநாட்டியம், அண்டரோகம் வாத நோய், விஷரோகம், தாசிபரன், சகல பிரபஞ்சமுமறிந்தவன், நிலையான பேச்சு, புத்திரக்குறைவு, பச்சைஇரத்தினம், செங்கன்று வர்க்கம், இலை, பாசிப்பயறு, தாரா, வெந்தயம் இவைகளுக்கெல்லாம் புதனேகாரகன். [1]

கல்வி, கருவூலம், கணிதம், மெய்யறிவு, அந்தணர். சிற்ப வேலை. சோதிடம். புனிதப்பயணம். அறிவார்ந்த சொற்பொழிவு. வணிகம். இளகியமனம். வேதாந்த தத்துவம். துறவறம். மருத்துவர். உடற்பயிற்சி. பணிவு. அச்சம். பக்தி. நகைச்சுவையுணர்வு. அமைதி. குடும்பச் செழிப்பு. மொழிப்புலமை. மொழிப்பற்று. அனுகூலம். நன்மை.

---

[1] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 46

நடுநிலைமை. இதிகாச புராணங்களில் நிபுணத்துவம். நவரத்தினங்களை தரம் பிரிப்பதில் நிபுணர். இலக்கணம் கற்றவர். இராஜதந்திரம் அறிந்தவர். [2]

ஒருவரின் பேச்சு வன்மை. மேதைத்தனம். கலைகளில் திறன். கற்றவரால் பாராட்டப்படுதல். தாய் மாமன். திறமையான பேச்சு. தெய்வவழிபாடு தொடர்பானவைகளில் புலமை. அறிவை வளர்க்கும் ஆர்வம். புத்திசாலித்தனம். யாகங்கள் மற்றும் ஸ்ரீவிஷ்ணு தொடர்பான ஈடுபாடு. உண்மை உரைத்தல். பொழுது போக்கு இடங்கள். முத்துச்சிப்பி. இயந்திரங்களை உருவாக்குதலும். இயக்குதலும் தொடர்பானவற்றில் திறமை. உறவினர். சினேகிதர். இளவரசன். மகன். உடன் பிறந்தவர். சகோதரியின் குழந்தைகள் ஆகியன. [3]

அறுகம்புல் போன்ற பசுமையான வண்ணம் கொண்ட உடல். வாதம் பித்தம், வாய்வு ஆகிய மூன்றும் கலந்த உடலமைப்பு. இனியவார்த்தை. நரம்பு மண்டலம். சிவந்த அகலமான விழிகள். பச்சைநிற ஆடைகள் தரித்துள்ளவர். வேடிக்கையான பேச்சுக்களை உடைய இவரின் உடல் அங்கள்கள் பொருத்தமுற அமைந்திருக்கும்.[4]

அறிஞர்கள் கூடும் இடங்கள். ஸ்ரீமகாவிஷ்ணு தொடர்பான இடங்கள். பொழுது போக்கு இடங்கள். கணிதம் தொடர்பான இடங்கள். சபைகள். வடக்குத் திசை புதன் தொடர்புடையன. [5]

புதன் பச்சை நிறத்தையும். வடக்கு திசையையும் குறிக்கும். கல் - பச்சை. புதன் மூளை. வாய். நாக்கு. நரம்புகள் ஆகிய உறுப்புகளை குறிக்கும். மனவியாதிகள். நரம்பு சம்பந்தமான வியாதிகள் ஆகியவற்றைக் கொடுக்கும். [6]

---

[2] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 10

[3] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 69

[4] மேலது ப. 69

[5] மேலது. ப. 70

[6] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 19

அறிவாற்றல். பேச்சாற்றல். எழுத்தாற்றல். நகைச்சுவை. அறிவுக்கூர்மை. கல்வியில் நிபுணத்துவம். மெய்யறிவு. தொழில் நுட்ப அறிவு. பேச்சு வன்மை. பலமொழி அறிவு. மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் திறமை. கட்டி மேய்க்கும் சாமர்த்தியம் ஆகியவற்றிற்கு புதன் காரகன் ஆகும். [7]

புதன் என்றாலே புத்தி. அறிவு என்பதாகும். எனவே கல்வி. இலக்கியம். அறிவு. தகவல் தொடர்பு. கலைகள். விளம்பரங்கள். பொதுமேடைகளில் பேசுதல். தாய் மாமன். நண்பர்கள். குழந்தைப்பருவத்தை குறிப்பவர். புதன் இளமையாகவும். வேகமாகவும் இயங்கும் கோள். எனவே அம்சத்தில் புதன் உள்ளவர் செயல்களை விரைவில் செய்து முடிப்பவர். மேலும் ஒரே சமயத்தில் பல செயல்களைச் செய்பவர். [8]

மெலிந்ததேகம். மெலிந்தஇடை. சிவந்தகண்கள். சலனபுத்தி. கோபக்காரர். இளமையானவர். நிலையில்லா மனம். காயப்படுத்துபவர். தீ. ஆயுதங்கள். முரட்டுக்குரல். சுருண்ட. பளபளப்பான கேசம். தைர்யசாலி. திறமையான பேச்சாளி. சாகசம் செய்ய விரும்புபவர். [9]

நட்பு. இலை அடர்ந்த மரங்கள். தர்க்க வாதம். பயணம். விவசாயம். நரம்பு மண்டலம். சூழ்நிலைகளோடு ஒத்துப் போதல். தீயசக்திகளுக்கு எதிராக அணியப்படும் தாயத்து. முடிகயிறு போன்றவை. பாரபட்சமாக நடத்தல். தொழில். உத்தியோகம். வணிகம். புதன் பலவீனமானால் பேச்சு மற்றும் கேட்பதில் குறைபாடுகள். ஆற்றலின்மை. வஞ்சகத்தனம். [10]

நகைச்சுவை. நுண்ணறிவு. கணிதம். எழுத்தாற்றல். ஓவியம். வண்ணம் தீட்டுதல். தேவாலயம். விரைவாக புரிந்து கொள்ளுதல். தூதர். இடைத்தரகர். அமைச்சர். யாகசாலை. சோதிடம். பேச்சாற்றல். கவிஞர். எழுத்தர். சங்கம். பள்ளிக்கூடம். வேதாந்தம்.

---

7 டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 19

8 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 114

9 மேலது.

10 மேலது.

கல்வி. பல்மொழி அறிவு. தணிக்கையாளர். வானசாத்திரம். பயம். பக்தி. சுயகட்டுப்பாடு. ஆய்வுக்கருத்து. விஷ்ணு வழிபாடு. விளையாட்டு மைதானம். தியாகம். உண்மையாக இருத்தல் முதலியன. [11]

துடிப்பான பேச்சாற்றல். விரைந்த செயல். புத்திக் கூர்மை. ஞாபக சக்தி உடைய மெலிந்த உடல்வாகு உடைய பெண் அல்லது பங்குதாரர். இரகசியக் குறிப்பு. எழுத்து. ஒப்பந்தம் மூலம் பிரச்சினை. உணர்வுப்பலன். ஞாபக சக்திக் குறைவு. நல்ல கணித. சோதிட ஆய்வு. பொறியியல் சம்பந்தமான உயர் கல்வி. கணினிக் கல்வி. வியாபாரம். ஒப்பந்தக்காரர். கணிதங்கள். தணிக்கையாளர். கணக்கர். ஏஜெண்ட். புரோக்கர் தொழில். உல்லாசமான நண்பர்கள். இன்பம். பேராசை. இரகசிய நடவடிக்கை. மருத்துவ ஆய்வு. [12]

எழுத்து வேலை. கணிதம். கவி. நுண்கலைகள் மூலமாகப் பொருள் தேடுதல். [13]

நகைச்சுவைப் பேச்சு. புத்திக்கூர்மை. ஞாபகசக்தி. மெலிந்த உடல். அனைவரிடமும் நன்கு பழகுதல். நல்ல கருத்துகளைக் கூறுதல். நல்ல தெளிவான பேச்சு. இரட்டைக் குரல். விரைந்த செயல்பாடு. விலை மதிப்புமிக்க கருவிகள். எழுத்து. கணிதம். பேச்சு இவைகளில் நாட்டம். கணிதம். கல்வி. நுண்ணிய கருவிகள். நூல்கள். கலை நுணுக்கம். நளினம் மிக்க பேச்சு. ஞாபகசக்தி. ஒப்பந்த பேச்சால் வெற்றி. அடிமைத்தொழில் மூலம் பணவரவு. [14]

வித்தை(கல்வி). கருவூலம். கணிதம். அறிவு. பேச்சு. பிராமணர். கையெழுத்துப்பிரதி. சோதிடம். சிற்ப வேலை. எழுத்து. வானசாத்திரம். தீர்த்தயாத்திரை. விவேகமான பேச்சாற்றல். சொற்பொழிவு. கோவில்கள். வியாபாரம். சிறந்த ஆபரணங்கள். மென்மையான பேச்சு. வேதாந்தம். துறவு கொள்ளுதல். மருத்துவர். பயம். நடனம். பக்தி.

---

[11] டி. விமலன் - வால்மீகி இராமாயணத்தில் சோதிடவியலின் கோட்பாடுகள் - ப. 221

[12] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 39

[13] டி. விமலன் - பிருகத் சாதகம் - ப. 41

[14] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 39

விநயம் (பணிவு). நகைச்சுவை உணர்வு. சுயக்கட்டுப்பாடு. சாதுர்யமான பேச்சு. விஷ்ணு உபாசனை. தெலுங்கு பாஷை. சுப காரியங்கள். அலைச்சல். புனித கருமங்கள். கோபுரங்கள். தோட்டம். சன்மானம். பல்பொருட்கோவை. புராண இதிகாசங்களில் நிபுணத்துவம். இலக்கணம். இரத்தினப் பரிட்சையில் திறமை. வித்வான். மந்திர உச்சாடனம். இராஜதந்திரம் முதலியன புதனின் காரகத்துவங்களாகும். [15]

### *1.3.2. சனியின் காரகத்துவம்*

சனியும் வானத்தில் நல்ல ஒளியுடனும், அழகுடனும் தோன்றுகின்றது. வெற்றுக் கண்களால் இதைக் கண்டுகளிக்கலாம். இதன் குறுக்களவு 73,000 மைல்களாகும். சூரியனுக்கும், சனிக்கும் இடைப்பட்ட தூரம், சராசரியாக 88.6 கோடி மைல்களாகும். இது சூரியனை ஒரு முறை சற்றிவருவதற்கு 29 ½ ஆண்டுகள் ஆகின்றது. இதனுடைய தற்சுழற்சியின் காலஅளவு கணக்கில் 10 ¼ மணி நேரமாகும். [16]

இயற்கையிலேயே அசுபர். சனியின் ஆதிக்கம் வலிமை உடையது. அதேசமயம் எதிர்மறையானது. நோய், வயோதிகம், மரணம், தத்துவம், வைராக்யம், துன்பம், கஷ்டப்படுதல், இழப்பு. திருட்டு போதல், சூதாட்டம், ஒழுக்கமற்ற செயல்கள், நீண்ட ஆயுள், தடைகள், எல்லைகள், அவமரியாதை, தவறான செயல்கள், வேட்டைக்காரர்கள், யோகாசனப்பயிற்சி முதலியன சனியின் காரகத்துவங்கள்.[17]

சூரியனுக்கு வெகுதொலைவில் சனி உள்ளார். எனவே மிக்குறைந்த வெளிச்சமே அங்கு உள்ளது. சனி மிகக் குளிர்ச்சியானது. வறண்டது. கடினமானது. மலட்டுத்தன்மை உடையது. கட்டுப்படுத்துவது. [18]

---

[15] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 163

[16] டி. விமலன் - அடிப்படை சோதிடவியல் - ப. 47

[17] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 118

[18] மேலது.

சனியின் ஆதிக்கத்தில் உள்ளவர் சோம்பேறியாகவும், மந்தமானவராகவும், சூதாடுபவராகவும் இருப்பார். வண்ணம் - நீலம். இலத்தினம் - நீலக்கல். உலோகம் - இரும்பு. எண். – 8. [19]

திருடர்கள், வேலையாட்கள். அன்னிய நாடுகள். அன்னிய மனிதர்கள், அன்னிய மொழி கற்றல், வெளிநாட்டுப் பயணம். விவசாய உற்பத்தி, எண்ணெய், வாயு, இரும்பு, தாதுக்கள், வேட்டையாடுபவர், யோகப்பயிற்சி, ஆபத்தான பொருட்கள். வறுமை, ஏழ்மை, கொடூரத்தனம், கால் ஊனம், ஏமாறுதல், ஒற்றுமையின்றி இருத்தல், சச்சரவுகள், மனச்சோர்வு, ஏக்கம், சுவாசக் கோளாறுகள், இல்லற வாழ்வில் குறைபாடுகள் போன்றன சனியின் செயல்களாகும். [20]

ஸ்திரத்தன்மை, பொறுமை, விடாமுயற்சி, எதையும் தாங்கும் தன்மை, விவேகம். முன்சாக்கிரதை, சுயக்கட்டுப்பாடு, கடமை உணர்வு, சிக்கனம், பொதுசன தலைமை அமைப்பு, இரக்கம், தயை ஆகியவை சனியின் சுபத்தன்மைகள். உச்சத்தில் சனி இருந்தால் நீண்ட ஆயுள், தர்மவான், தன் துணையிடம் நேசம். [21]

ஒரு மனிதனின் ஆயுள், மரணம், அச்சம், துக்கம், அவமானம், கீழிறக்கப்படுதல், நோய், வறுமை, கூலி வேலை செய்தல், அபவாதம், பாபம், அசுத்தத்தன்மை, தண்டிக்கப்படுதல், துரதிர்ஷ்டம், நிலையாக இருத்தல், தாழ்ந்தவருக்கு சேவகம் செய்தல், விவசாயத்துடன் தொடர்பானவை, சிறைச்சாலை, கட்டுப்படுதல் ஆகியன யாவும் சனியால் அறியப்படுபவை.[22]

சனியின் நிறம் அடர்ந்த இருள் வண்ணம், கால்களில் ஊனம் உடையவன், வாயு சுபாவம் உடைய உடல்கூறு பெற்றவன், இவனின் கண்கள் ஆழத்தில் அமைந்திருக்கும், மெலிந்த நெடிய உடல் உடையவன், இரத்தக் குழாய்களும் நாளங்களும் உடைய உடலமைப்பு பெற்றவன், சோம்பேறி, அவதூறு பேசுபவன், உடம்பின் தசைப்பகுதிகளை

---

19 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 118

20 மேலது.

21 மேலது ப. 119

22 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 71

ஆள்பவன், கொடூரமானவன், இரக்ககுணம் இல்லாதவன், மந்தமான புத்தி உடையவன், நீண்ட பெரிய நகங்கள் உடையவன், அடங்காத கேசம் உடையவன், அழுக்குடையவன், பாப செயல் புரிபவன், மூர்க்க குணமும், கோபமே உருவெடுத்தவனாக இருப்பவன். வயதான தோற்றம் கொண்டு கருப்பு நிற ஆடை அணிந்திருப்பான்.[23]

ஒதுக்கப்பட்ட மக்கள் வாழும் பகுதிகள், அழுக்கான இடங்கள், மேற்குத்திசை, ஐயனார் என்று தமிழ்நாட்டில் பரவலாக வணங்கி வழிபடும் ஐயப்பன் என்ற சாஸ்தாவின் கோயில்கள்.[24]

சோம்பல்தன்மை, முட்டுக்கட்டைகள், துன்பம், நோய், துக்கம், இறப்பு, பெண்ணின் மூலமாக இன்பம், இனத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டவர், ஒழுங்கற்ற உடல் உறுப்புகள், அலி, பார்வைக்கு அழகானவர், தாழ்ந்த இனத்தில் பிறத்தல், நேர்மையற்ற நடத்தை, ஆண்மையில்லாமை, பொய் பேசுதல், வள வள பேச்சு, கூடுதலான கோபம், கீழ்த்தரமான பெண்ணிற்கு பிறத்தல், தவறான வழியில் பிறத்தல், கைம்பெண்ணின் முறைதவறிய நடத்தை, அழுக்குஆடை மற்றும் வீடு, தீயவர்களுடன் பழகுதல், கொடூரம், பெருந்தன்மை, இரத்தினங்கள், சூத்திரர் மற்றும் வைசியர், மற்ற பிரிவினரின் பணிகளை கற்றுக் கொள்ளுதல், நொண்டி, முடம், கொடியவன், விவசாய தொழிலாளர் வாழ்வு, விவசாய தொழிலால் வாழ்க்கை, வீழ்ச்சி, போர், தவறாகப் பயன்படுத்தப்படும் வலிமை, பாம்புலகம், துருக்கி நாட்டார், கிழிந்த ஆடை, சோம்பல் குணமுள்ள அந்தணர், மலைகளிலும் வனங்களிலும் அலைதல், இரக்கமற்றவர், வேட்டைக்காரர், காம வேட்கை, கவர்ச்சியாக உடையணிதல், களவு, கொடிய செயல்களில் நாட்டம்.[25]

சனி கறுப்பு நிறமும் மேற்கு திசையும் பிரீதியானது. அதிர்ஷ்டக்கல் - நீலம். சனி முழங்கால், கணுக்கால், எலும்பு, பற்கள் ஆகிய உறுப்புகளை குறிக்கும். சுனி

[23] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - பக்.71

[24] மேலது.

[25] டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 13

கொடுக்கக்கூடிய நோய் பல் நோய், இளைத்த உடல், இருமல், காசம், வாய்வுப்பிடிப்பு, மனோ பீதி முதலியன.[26]

சாதகத்தில் சனி மிக நேர்த்தியாக அமையப் பெற்றிருப்பின் உண்மை, நேர்மை, உழைப்பு, சிக்கனம், சாமர்த்தியம், துறவியாதல், ஞானியாதல் போன்ற உயர் குணங்களை கொடுக்கும்.[27]

சனி இரகசியவாதியாயிருத்தல், யாரிடமும் அதிகம் பழகாமை, பெண்களை கண்டு நாணுதல், தயக்கம், சந்தேகம், மந்தபுத்தி, மனோபயம், நீண்ட காலம் நோயினால் அவதிப்படல், அங்க பின்னம் ஏற்படல், அவமானத்துக்குள்ளாதல், பதவியினின்றும் இறக்கப்படல், பதவியிறக்கம் செய்யப்படல், துன்பம், துயரம், ஏமாற்றம், துரதிர்ஷ்டம், காரியதாமதம், தோல்வி, கடனால் தொல்லைகள், பசி, பட்டினி, சாமியார் ஆகுதல், பிச்சை எடுத்தல், கூலி வேலை செய்தல், சதிவேலைகள், வஞ்சனைப்புத்தி, திருட்டுப்புத்தி, ஜெயில்வாசம், விதவைப் பெண்களை புணர ஆசைப்படுதல், அருவருப்பான பெண்களை புணர ஆசைப்படல் ஆகியவை.[28]

தாழ்வு எண்ணம், கோழைத்தனம், எவரையும் நம்புவது இல்லை, மந்த புத்தி, சந்தேகக்குணம், கூடுதல் பொய், சப்தமில்லாத பேச்சு, கருமித்தனம், பிறர் பொருள் மீது பேராசை கொள்ளல், பயந்த தன்மை, மனநோய், தனது கருத்துக்களை வெளியில் கூற அச்சம் கொள்ளுதல், விரைவில்லாத ஈடுபாடு, தாமதம், கருப்பு நிற பொருட்கள், இரும்புச் சாமான்கள், தாமதமாகக்கல்வி, தரிசுநிலங்கள், அழுக்கடைந்த இடங்களில் வசித்தல், ஒழுக்கமில்லாத, துக்கமான காதல் உறவு, இன்பமின்மை, மந்த புத்தி உடைய குழந்தை, கீழத்தரத்தாருடன் காதல் உறவு, தோல் தொடர்பான நோய்கள், சிறிய தொகை, சிரமத்தின் பேரில் கடன், கூலி வேலைகள், பணவரவில் தாமதம், நிலையற்ற மனைவி, வயதுக்கு மூத்த பெண், ஒழுக்கமில்லாத குணம், பொய்யான நடிப்பு, விபத்து, தற்கொலை, புத்தியை இழத்தல், ஞாபகசக்தி குறைவு, நல்லஆய்வு தொடர்பான கல்வி,

---

26 டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 21

27 மேலது.

28 மேலது ப. 22

தாமதமான மாற்றங்கள், தகுதிக்கு குறைந்த அல்லது முதுமைப் பெண்களிடம் முறையற்ற தொடர்பு, நிலையான தொழில், அதிக உழைப்பு, தாமதமான உயர்வுகள், அல்லது உயர்வற்ற தொழில்கள், நண்பர்கள், ஒழுக்கமின்மை, தனது ஆசைகளை வெளியே காட்டிக் கொள்ளாமை, இரகசியச்செயல், ஆய்வு, சேமிப்பு, அந்தரங்க வாழ்க்கையில் சிக்கல்கள்.[29]

வேலையாட்கள், துன்பத்தை தரும் தொழில்களினாலும், (ஆடு வெட்டுதல், கோழி வெட்டுதல், தன்பம் தரும் தண்டனைகளை நிறைவேற்றுதல் போன்றவை) சுமைதூக்குதல், தன் நிலைக்கு குறைவான பணி செய்வதாலும் பொருள் தேடுவர்.[30] அனாரோக்கியம், தொல்லைகள், இடையூறு, மனக்கவலை, வியாதி, விரோதம், துக்கம், மரணம், ஸ்திரீ சௌக்கியம், பெண் பணியாள், ஜாதிப்பிரஷ்டம், விசித்திர மனிதன். அங்கஹீனன், தருமம், எஜமான், ஆயுள், கீழ்ஜாதியில் பிறத்தல், திரேதாக்னி, பணியாளின் கடமைகள், ஒவ்வாத செயல்கள், ஆண்மையின்மை, பொய்பேசுதல், நீடித்த விருப்பம், முதுமை, கோபமும் வெறுப்பும், முயற்சி, கீழ்த்தரமான பெண்ணுக்கு பிறத்தல், விதவையின் முறைதவறிய நடத்தை, தவறான வழியில் பிறந்த குழந்தை, அழுக்கு ஆடை, துஷ்டனோடு நட்பு, கெட்டஎண்ணம், பாவம், குரூரம், கருநிற தானியங்கள், ரத்தினங்கள், இரும்பு, தயாளகுணம், பரோபகாரம், இதர சாதி நடைமுறைகளை அறிந்து கொள்ளுதல், நொண்டி, கொடியவன், ஆயுள் நீடிக்க வேண்டிப் பரிகாரம், விவசாயம், ஆயுதசாலை நிர்வாகம், வெளியுறவு, கீழே விழுதல், யுத்த பூமியில் சஞ்சாரம், முரட்டுத் துணிச்சல், தாமஸ குணமுள்ள பிராமணன், விஷ பூமியில் அலைதல், மலைகளில் சஞ்சாரம், முரட்டுத் துணிச்சல், வேட்டைக்காரன், அருவருப்பான முடி, முழுமையான ராஜ்யம், வெள்ளாடு, காம இச்சை, கவர்ச்சியான உடை அணிதல், நாய், திருட்டு, கல்நெஞ்சம்.[31]

சோம்பல், மரம், கல், மண் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள், கருமை நிறப் பொருட்கள், மண்ணெண்ணை, கச்சா எண்ணை, கள்ளத்தனமான மது விற்பனை,

---

[29] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - நவீன கால ஜோதிட வளர்ச்சி - ப. 45

[30] டி. விமலன் - பிருகத் சாதகம் - ப. 41

[31] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 166

கிழிந்த ஆடை, பிறா் பொருளில் ஆசை, அழுக்கான இடம், வெளியிட வாழ்வு, கருமி, இறப்பு, ஆயுள், அதிா்ஷ்டமின்மை, வறுமை, பாவச்செயல், நோய்த்தன்மை, விவசாய செயல், சிறை தண்டனை, பேரழிவு, மாசு, துன்பம், ஒவ்வாத செயல்கள், கல்நெஞ்சன், பொய் பேசுதல், வாக்கு தவறுதல், தீய எண்ணம், கீழான பணியாளா், அடிமைச்செயல், ஒதுக்கப்பட்ட இடங்கள், நாடோடியாக அலைதல், பொறாமை, நோ்மைக் குறைவு, பிரேத காரியம், ஏழ்மை, விபத்து.[32]

தீா்காயுசு, சாத்தான் உபாயம், இரும்பு, ஆள்அடிமை, வயல்களம், மரவேலை, களவு, ஆத்மஹிம்சை, சிறைப்படுதல், இராசதண்டனை, வீண் வாா்த்தை, வெட்கமில்லாமை, துன்பம், வாயடித்தல், கடன், மயக்க உணவு, நீச்சப்பெண், விதவைப்பெண், நாடுகடத்தப்படுதல், ஊனமான பெண் சோ்க்கை, அலி, உடல்அவயக் குறைவு, சித்தப்பிரமை, பித்தநோய், கடுகு, உளுந்து, எள்ளு எண்ணெய் இவற்றிற்கெல்லாம் சனியே காரகன். [33]

### *1.3.3. குருவின் காரகத்துவம்*

அந்தணா். ஆசிரியா். கடமை. செல்வம். சோதிடம். தத்துவம். வணிகா். அரச மரியாதை. கொடை. சமயக்கடமை. மற்றவா்களுக்கு உதவுதல். நடுநிலைமை. வாக்குத்திறமை. அறிஞா். அறிவுத்திறமை. இலக்கியம். நற்குணத்தன்மை. மகிழ்ச்சி. துன்பம். அமைதியான குணம். மற்றவா்களின் மனத்தை யூகித்தல். சூழ்ச்சித்திறன். வேதநூல். நுண்ணறிவு. மென்மையான தன்மை. சமயக்கடமைகளில் ஈடுபாடு. சமயம் சம்பந்தப்பட்ட பணிகள். [34]

பெரிய மனிதத் தோற்றம். உண்மை பேசுதல். ஆலோசகா். பஞ்சாயத்துத் தலைவா். நல்ல பேச்சாற்றல். கல்வி. தேவாலயங்கள் கட்டுதல். சமய சந்தா்ப்ப நுண்ணறிவு. ஆளுமைத் திறன். தயாளகுணம். தா்க்க சாத்திரம். மற்றவா்களுக்கு

---

[32] டி. விமலன் - வால்மீகி இராமாயணத்தில் சோதிடவியலின் கோட்பாடுகள் - ப. 222

[33] ஸ்ரீராமய்யங்காா் - குடும்ப சோதிடம் - ப. 47

[34] டி. விமலன் - உத்திரகாலாமிா்தம் - ப. 11

உதவிடும் மனப்பான்மை. வாக்குத்திறமை. மதிப்பான செய்கைகள் ஆகியவற்றிற்கான காரகன் குரு ஆகும். பெரியமனிதத் தோற்றம் கொண்டவர். உண்மை பேசுபவர். சிறந்த ஆலோசகர். நல்ல பேச்சாற்றல் திறமை. புத்திக்கூர்மை உள்ளவர். தெய்வவழிபாடு செய்பவர். பெரியமனிதரை வெற்றி கொள்பவர். தேடாத செல்வம் உடையவர். யாத்திரை. கோவில் பணியில் ஈடுபடுபவர். கௌரவப் பதவி வகிப்பவர். உயர்பதவி வகிப்பவர். சந்தோஷமான வாழ்க்கை வாழ்பவர். உண்மையான நண்பர்கள் உடையவர். கல்வியில் சிறப்பானவர். சட்டப்படியான மூலதனம் செய்பவர். [35]

ஞானம். நற்குணம். மகான்கள். மந்திரி. ஒருவரின் ஒழுக்கமான நடத்தை. கற்பிக்கும் திறன். பெருந்தன்மை. வேதஅறிவு. சாத்திரங்கள். புராணங்கள் மற்றும் ஸ்மிருதிகளில் புலமை. அனைத்து வகைகளிலும் செழுமை. தேவர்களிடமும் அந்தணர்களிடமும் பக்தி. ஆசீர்வதிக்கப்பட்ட தன்மை. யாகம். தவம். ஆன்மீக நம்பிக்கை. பொக்கிஷ அறை. மேதைத்தனம். புலனடக்கம். கணவனால் கிடைக்கும் மகிழ்ச்சி. கௌரவம். பாசம் முதலியன. [36]

குரு மஞ்சள்நிற வர்ணம் உடையவர். இவரது கண்களும். கேசமும் பழுப்பு நிறமுடையன. பருத்த உடலும். உயர்ந்த மார்பும், பெருத்த நடையும் கொண்டவர். சுபத் தன்மையை குணமாகக் கொண்டவர். மிகவும் புத்திசாலியானவர். சிங்கத்தின் கர்ஜனை போன்ற, சங்கின் நாதம் போன்ற குரலமைப்பு கொண்டவர். எப்போதும் செல்வச் செழிப்பைத் தருபவர். கல்வி சம்பந்தமான விஷயங்களிலும், மொழி பெயர்த்தலிலும் திறமையானவர். [37]

மனித உடலில் உள்ள கொழுப்பை ஆள்பவர். பொக்கிஷம், அரச மரம், அந்தணர்கள் வாழுமிடங்கள், தெய்வம் உறையுமிடங்கள், வடகிழக்குத்திசை, சோதிடர்,

---

35 டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 42

36 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 70

37 மேலது.

மந்திரி, குரு, ஆசிரியர். அந்தணர். சன்னியாசிகளுக்கு தலைமை வகிப்பவர். முக்கிஸ்தர். புறா. குதிரை. அன்னப்பறவை ஆகியன குருவின் காரகங்கள். [38]

குரு அனைத்து வகைகளிலும் அனுகூலமானவர் மற்றும் சுபர். குரு சிறப்பாக அமைதலே பல நன்மைகள் செய்வதாகும். மனிதன் உயர்ந்த மேலான நிலைகளை அடைவது குருவால்தான். ஒரு மனிதனை நன்மை செய்யத் தூண்டுவது குருவே ஆகும். சாதகத்தில் குரு சிறப்பாக அமையப் பெற்றவர்கள் செல்வந்தர்களும், அதிகாரம் மிக்கவர்களும். குரு என்ற வார்த்தைக்கு மதிப்பு மிக்கவர். ஆசிரியர் என்று பொருள். குருவின் நிறம் ஒளிரும் மஞ்சள். உலோகம் தங்கம். எண்.5. ஆண்தன்மை வாய்ந்தவர். மஞ்சள் புஷ்பராகம் குருவின் இரத்தினம். [39]

குரு மகன். கணவன். மதம். நிதி. வருமானம். உண்மை. செழிப்பு. மேதைத்தனம். தான தர்மங்கள். நல்ல எண்ணங்கள். மகிழ்ச்சி. புத்திசாலித்தனம். ஆன்ம ஈடுபாடு. கற்றல். உயர்வான மனிதர்கள். ஆசான். மத நடவடிக்கைகள். கல்வி. புனிதயாத்திரைகள். புனிதஸ்தலங்கள், ஞானம். பழங்கள். பழமரங்கள். பொக்கி' அறைகள், சிற்பஞானம் ஆகியவை குருவின் காரகத்துவங்கள். [40]

இரத்த ஓட்டம். உடலிலுள்ள திரவங்கள். ஈரல். கொழுப்புகள். தொடை. பாதம் போன்றவை. குரு உச்சமாக இருப்பவன் தலைவனாகவும், செல்வந்தனாகவும், அதிகாரம் உள்ள பதவி வகிப்பவனாகவும், மதிப்பு மரியாதை பெற்றவனாகவும், செல்வாக்குடையவனாகவும் இருப்பான். புனிதமானவனாக. தர்ம சிந்தனை உள்ளவனாக. பண்பாடு மிக்கவனாக. காரியங்களில் மிகுந்த கவனத்துடன் செயல்படுபவனாக. கோபம் கொண்டவனாக இருப்பான். [41]

---

[38] பலித ஜோதிஷம் - ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ப. 70

[39] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 116

[40] மேலது.

[41] மேலது.

குரு பாதிப்படைந்தால் மகிழ்ச்சியின்மை. அகங்காரம். சட்டச் சிக்கல்கள். கவனமின்மை. தற்பெருமை. அதிகமாகச் சாப்பிடுதல். கடன்காரர் தொல்லை. தவறான கணிப்புகள். கடன். சச்சரவுகள். சண்டைகள். தகுதியற்ற நம்பிக்கைகள். குழந்தை இல்லாமை. சூதாட்டம் போன்றவை ஏற்படும். ஊதாரித்தனம். அளவுக்கு மீறிய ஆடம்பரம். நேர்மையற்ற தன்மை. நாகரீகமற்ற நடத்தை. இல்வாழ்க்கைக் குறைபாடுகள் உண்டாகும்.[42]

அந்தணர். குருக்கள். கல்வியாளர்கள். கடவுள். அறக்குழு இவைமூலமாகப் பொருள் தேடுபவர். [43]

குரு பத்தாம் பாவத்தில் இருந்தால் தொழில் மற்றும் வியாபாரங்களில் மஞ்சள் நிறமும், வடகிழக்குத் திசையும் நல்லது செய்யும். அதிர்ஷ்டக்கல் - புஷ்பராகம். குரு காது, தொடை, பாதம், சீரண உறுப்புகள் ஆகியவற்றைக் குறிப்பவர். குரு அஜீர்ணம். மஞ்சள் காமாலை போன்ற நோய்களைக் கொடுப்பவர். [44]

ஆசிரியர். பிராமணர். சமுதாய மதக்கடமைகள் உள்ளவர். பசு. சேமிப்பு. புதையல். வீரம். கீர்த்தி. தர்க்கம். சோதிடம். வேதாந்தம். கோபமும் வெறுப்பும் தரும் செயல். வியாபாரி. உடல் ஆரோக்கியம். தெய்வம். தவம். தருமம். கொடை. நாவன்மை. பரோபகாரம். உயிர் நண்பர்கள். நாவன்மை. மூளை. முதுமை. புண்ணியஸ்தலம். மகிழ்ச்சியான வீடு. ஞானி. அறிவுத்திறமை. காவியம் இலக்கியம். இரசிகர்களை கவர்தல். பிரம்ம ஸ்தாபனம். அக்கினிஷ்டோமப் பலன். பழரசம். சுபம். சாத்வீகம். சுக துக்கங்கள். இரக்கசிந்தை. தங்கம். அலங்காரம். தந்திரம். புனித நூல்களில் சிறந்த அறிவு. மிருதுவான மகிழ்ச்சி. மதம் மற்றும் நீதி தொடர்பான விசயங்களில் கட்டுப்பாட்டுடன் இருப்பவர். [45]

---

[42] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 116

[43] டி. விமலன் - பிருகத் சாதகம் - ப. 41

[44] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 19

[45] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 163

ஆசிரியர். கருவூலம். அந்தணர்களுக்கு மரியாதை. சமூக சிந்தனை. சமயக்கடமை. தர்க்க சாத்திரம். வேதம். வேதாந்தம். தவம். சமயநூல்கள். சேமிப்பு. வங்கி. கடமை. உண்மை. சாத்வீக குணம். யோகி. செல்வம். தியானம், ஞானி. புகழ். நேர்மை. கௌரவம். பெருந்தன்மை. தர்மகுணம். பழமைவாதி. வழக்கறிஞர். சமயக்குருக்கள். வங்கியாளர். வருமான வரி அலுவலகம். அமைச்சர். ஆலோசகர். மேலாளர். நற்காரியச் செயல்கள். நெற்களஞ்சியம். அரசகௌரவம். குரு முதலியன. [46]

புத்திரர். பிரும்மா, ஞானம். யோகாப்பியாசம். ஆசாரியத்துவம். அஷ்டமாசித்திகள். உபதேசம். புத்தியுக்தி. விவகார ஆலோசனை. இராஜ்யாதிபத்யம். குடும்பம். அரச சேவை. தனம். ஒழுக்கம். பிரபல்யம். இராஜசன்மானம். பட்டப்பேர். சுருதி. ஸ்மிருதி. ஸத்விஷயம். சாந்தம். சொர்ணம். வைடூர்யம். புஷ்பராகம். கோமேதகம். புஷ்பம். தித்திப்புச்சுவை, நேத்திரங்கள். விப்ரவர்க்கம். ஆண்டிவர்க்கம். ரிஷிவர்க்கம். தேன். கடலை. சீரகம் இவற்றிற்கெல்லாம் குருவே காரகன். [47]

### *1.3.4. சூரியனின் காரகத்துவம்*

சாதகத்தில் சூரியன் அமர்ந்த இடம் மிரளகயனக முக்கியமானது. ஏனெனில் சூரியன் நவக்கிரகங்களின் தலைவன், அரசன் என்கிறோம். உலகமெல்லாம் சூரியன் ஒளி தருபவன். பொதுவாக சூரியன் பாவர் பட்டியலைச் சேர்ந்தவர். ஆனால் சுபராகவும் இருப்பார். சூரியன் அரச வம்சம், அரசாங்கத்தில் உயர் பதவி, அரசியலில் உயர்ந்த இடத்தையும் குறிக்கும். [48]

நெருப்பையும், ஆண்மையையும், நவரத்தினங்களில் மாணிக்கத்தையும், ஆரஞ்சு நிறத்தையும் குறிக்கும், தந்தை, ஒருவரின் புறத்தோற்றம், செயல்படும் தன்மை, ஆத்மா,

---

[46] டி. விமலன் - வால்மீகி இராமாயணத்தில் சோதிடவியலின் கோட்பாடுகள் - ப. 222

[47] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 47

[48] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 111

தனித்தன்மை, உடல்நலம், தத்துவக் கண்ணோட்டம், மரியாதை, மதிப்பு. அந்தஸ்து போன்றவற்றை சூரியன் குறிப்பார். [49]

ஒருவர் விவேகமாகவும், உறுதிமிக்கவராகவும் இருப்பது சூரியன் மூலமே. சூரியன் சிறப்பாக அமைந்தால் நல்ல அதிர்ஷ்டம், உயர்பதவி, நம்பிக்கை, வெற்றி, முதல்தரமான குணநலன்கள், நல்லதே நடக்கும் என்ற தளராத நம்பிக்கை இவைகளை தரும். சூரியன் இதயத்தை குறிக்கிறார், ஆண்களுக்கு வலதுகண், பெண்களுக்கு இடது கண். [50]

தங்கம், தாமிரம், தந்தை, தைர்யம், சுபமானவைகள் அனைத்தும், மனமகிழ்ச்சி, செல்வாக்கு, அதிகாரம், தைர்யம், போரில் வெற்றி, அரசாங்கப்பணி, புகழ், சிவபெருமான் தொடர்புடைய செயல்கள், காடு மற்றும் மலைப்பிரதேசங்களுக்கு செல்லுதல், யாகம் முதலானவற்றில் பங்கேற்பு, கோயில்கள், உற்சாகம், கூர்மையான தன்மை இவை யாவும் சூரியனால் அறியப்பட வேண்டும். [51]

பித்த குணமுடைய சூரியன் எலும்புகளுக்கு வலிமை செய்கிறார், தலையில் குறைவான அளவே கேசம் உடையவர், அடர்ந்த சிவப்பு நிறம் உடையவர், சிவந்தும், பழுப்பு நிறமும் உடைய விழிகளை உடையவர், சிவப்பு ஆடை அணிந்துள்ளவர், சூரியன் வலிமையும், கோபமும், நீண்ட கைகளும் உடையவர். [52]

ஆன்மா, திறன், கண்டிப்பு, கோட்டை, நல்வலிமை, வெப்பம், சிறப்பு, நெருப்பு, சிவவழிபாடு, துணிவு, அரசு ஆதரவு, கசப்புசுவை, முதுமை, கால்நடைகள், துடுக்குத்தனம், நிலம், தந்தை, சுவை, தன்னையுணர்தல், எலும்பு, வீரம், வயிறு, வலுவான ஊக்கம், வனம், கண், மலைகளின் மேல் சுற்றித் திரிதல், அரசர், பயணம், நிர்வாகத்தன்மை, கண்நோய், உடல், தூய உள்ளம், நாட்டின் தலைவன், நோயிலிருந்து

---

49 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 111

50 மேலது.

51 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 66

52 மேலது.

விடுதலை, அணிகலன், தலைநோய், முத்து, குருதி, அரசமைப்பு, சிவப்புத்துணி, பொதுசேவை, பவழம், தீராதசினம், பகைவரைப் பிடித்தல், அமைதியான குணம், பகைமை[53]

சூரியன் கண், இதயம், முதுகுதண்டுவடம் ஆகிய உறுப்புக்களை குறிக்கும். சூரியன் கிழக்கு திசையை குறிப்பதால் சூரிய திசையில் கிழக்கு திசையில் அனுகூலம் பெறலாம். சூரியன் ஆரஞ்சு வண்ணத்தை குறிப்பதால், ஆரஞ்சு வண்ண பொருள்களின் வியாபாரத்தில் லாபம் ஏற்படும். அதிர்ஷ்டக்கல் - மாணிக்கம். [54]

சூரியன் கண் நோய்கள், பார்வைக் கோளாறுகள், இதய நோய்கள், தலைவலி போன்றவற்றை கொடுக்கும். சூரியன் பார்வை பெற்றால் பார்வை கோளாறுகள் ஏற்பட்டு இளம் வயதிலேயே கண்ணாடி அணிய நேரிடும். [55]

சூரியனை பிதுாக் காரகன் என்பர். எனவே சூரியனைக் கொண்டு தகப்பனார் நலம், தகப்பனாரால் லாபம் அல்லது விரயம், தகப்பனாருடன் நேசமான உறவு அல்லது பகை ஆகியன பற்றி பேசலாம். சூரியனைக் கொண்டு பூர்வீக சொத்துக்களால் அனுகூலம் உண்டா இல்லையா என்றும் கூறலாம். [56]

சூரியன் உண்மை பேசுதல், நேர்மைக்குணம், பெருந்தன்மை, புகழ் அடைதல், மதிப்பு மரியாதைகள் ஏற்படல், கௌரவம். [57]

பெருமதிப்பு, சுயநலம், பணியின் அடிப்படையில் அந்தஸ்து, நிர்வாகத்திறன், அரசினால் தனலாபம், பித்தளை பொருட்கள், கட்டளையிடுதல், வரிப்பணம், பட்டாக்கள், சம்பத்துகள், பொருட்கள், தகப்பனாரின் கடைசி காலப் பத்திரம், பொருட்கள், அரசியல்,

---

53 டி. விமலன் - உத்திரகாலாமிர்தம் - ப. 07

54 டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 16

55 மேலது.

56 மேலது.

57 மேலது.

ஒப்பந்தம், கௌரவமான மகன், காம இச்சைகளில் ஈடுபாடின்மை, எலும்புகளில் நோய், சட்டப்படியான பிரிவு, அரசினால் கடன் அல்லது உதவி, வழக்கு, உஷ்ண நோய், அரசினால் திருமணம், அதிகாரமிக்க மனைவி, கண்காணிப்பு, இன்ஸ்யூரன்ஸ், தண்டனை, தொல்லை, தானம் பெறுதல், உயர்கல்வி, கௌரவப்பதவி, ஒப்பந்தப்பயணம், குத்தகை, பணி, அதிகாரம், நம்பிக்கை, உடமைகளைப் பாதுகாத்தல், வெகுமதி, அரசு அதிகாரிகள் நண்பர்களாதல், வெற்றி, வரி, கடன் பாக்கி, அரசுத் தடைகள், அடக்குதல் போன்றவை சூரியனின் காரகங்கள். சூரியன் அரசு சம்பந்தப்பட்ட செயல்களை செய்பவர்.[58]

பொன்வணிகம், நறுமணப்பொருட்கள், வாசனைத்திரவியங்கள், கம்பள ஆடைகள், மருத்துவம், மருந்து வணிகம். [59]

தந்தை, ஆன்மா, வலிமை, வேகம், சூடு, அரசமைப்பு, நிர்வாகத்திறமை, மனத்தெளிவு, துணிவு, வீரம், கண், கண்நோய், தலைநோய், நெருப்பு, அரசாங்க ஆதரவு, செல்வாக்கு, நாற்கால் விலங்கு, குறிக்கோளுடைய பார்வை, வனம், கசப்பு, பித்தநீர், மரம், நாட்டின் தலைவர், வெளிப்படையான செயல், தீராத கோபம், உதவும் குணம், நம்பிக்கை, அலங்காரம், விருப்பம், அரசுப்பணி, நீதிபதி, அரசர், செயலாளர்கள், மாநகராட்சி, மாநகரம், பொன் மற்றும் பித்தளைக் கொல்லர்கள், சித்திரக்குள்ளர், மருந்து, நெருப்பு, விறகு, ஒளி, மலை, பாம்பு, கம்பிளி. [60]

ஆத்மா, பலம், தீவிரம், கோட்டை, நற்பலம், உஷ்ணம், செல்வாக்கு, நெருப்பு, வழிபாடு, கண்டிப்பு, துணிவு, முட்செடி, அரசாங்கத்திற்கு ஆதரவு, கசப்பு ருசி, முதுமை, கால்நடை, துஷ்டத்தனம், நிலம், தந்தை, ருசி, தெளிவான மனநிலை, மாபெரும் குறிக்கோளை நோக்கிய மேலான பார்வை, பித்ரு லோகம், வீரம், புல், வயிறு, ஊக்கம், வனம், கண், மலைகளில் சஞ்சாரம், நாற்கால் மிருகம், மன்னன், பயணம், பொது அல்லது தனிப்பட்ட விஷயங்களுக்கான நிர்வாகத்தன்மை, ஆத்திரமூட்டும் செயல்,

---

[58] டி. விமலன் - நவீன கால சோதிட வளர்ச்சி - ப. 34

[59] டி. விமலன் - பிருகத் சாதகம் - ப. 41

[60] டி. விமலன் - வால்மீகி இராமாயணத்தில் சோதிடவியலின் கோட்பாடுகள் - ப. 220

கண்நோய், தேகம், மரம், மனத்தெளிவு, தேசத்தின் தலைவன், வியாதிகளிலிருந்து விடுதலை, ஆபரணங்கள், தலைநோய், முத்துக்கள், வானமண்டல அதிபதி, சித்திரக்குள்ளன், செம்பு, தாமிரம், இரத்தம், ரத்தச்சிவப்பான கற்கள், அரசமைப்பு, ரத்தச்சிவப்புத்துணி, கற்கள், வெளிப்படையான நடத்தை, ஆற்றங்கரை, பவழம், தீராத கோபம், எதிரியை சிறை பிடித்தல், சாத்வீக குணம், எதிர்ப்பு, கனமான சணல்யிறு. [61]

பிதா, ஆத்மா, சிரசு, தந்தம், வலது நேத்ரம், சிலும்பின மயிர், பித்தம், சரீரம், வைத்தியம், ஒருதலைநோவு முதலியன. சிசு ரோகம், சுரம், வியாதி ஸ்திரீ அல்லது சித்தசுவாதீனமில்லாத ஸ்திரீ போகம், சௌகர்யம், பிரதாபம், தைர்யம், இராஜசேவை, உத்தியோகம், சைவானுஷ்டானம், தபசு, சதாசிவன், பஞ்சலோகம், வச்சிர ரத்தினம், இரசவாதம், யானை, கோதுமை, மிளகு, யாத்திரை, பகற்பொழுது, ஒளி, மலை, காடு, கிராம சஞ்சாரம் முதலியன சூரியனின் காரகங்களாகும். [62]

## *1.4. தொகுப்புரை*

இவ்வியலில் சோதிடம் பற்றிய விளக்கமும், சோதிடவியலின் வரலாறும், தணிக்கையாளர் பற்றிய விளக்கமும், கோள்களின் காரகத்துவமும் பற்றி விரிவாக அறியப்பட்டு உள்ளது. ஒன்பது கோள்களும் தணிக்கையாளர் பணிக்கு தாக்கத்தை தருகின்றன. எனினும் தணிக்கையாளர் பணியில் புதன், சனி, குரு, சூரியன் ஆகிய கோள்கள் கணித அறிவையும், அந்த கணித அறிவை பயன்படுத்தக்கூடிய அறிவையும் தருகின்றன. அவை ஜென்மஸ்தானமான பாவகமான இலக்கினத்திலும், வேலை, கடன், பணியாட்கள் ஸ்தானமான ஆறிலும், ஜீவன, கர்மஸ்தானமான பத்திலும் அமைவதால் ஏற்படும் அமைப்பு பற்றி அறியப்பட்டு உள்ளது.

---

[61] எஸ்.எம். சதாசிவம் - உத்திரகாலாமிர்தம் - மூலமும் உரையும் - ப. 159

[62] ஸ்ரீராமய்யங்கார் - குடும்ப சோதிடம் - ப. 46

# இயல் - 2



## கோள்களின் தொழில்களும், பாவகச் செயல்பாடுகளும்

## இயல் - 2

## கோள்களின் தொழில்களும், பாவகச் செயல்பாடுகளும்

### *2.0. அறிமுகவுரை*

புதன், குரு, ஆகிய கோள்கள் கணிதத்தில் திறமையையும். அதை செயல்படுத்துவதற்கான அறிவையும் தருகின்றன. தணிக்கையாளர் பணிக்கான காரகக் கோள்களான புதன், சனி, குரு, சூரியன் ஆகிய கோள்களின் தொழில்கள், இலக்கின, ஆறு, பத்தாம் பாவகச் செயல்பாடுகள், புதன், சனி, குரு, சூரியன் ஆகிய கோள்கள் இலக்கின பாவகமான இலக்கினத்திலும், கடன், வேலை, பணியாட்கள் ஸ்தானமான ஆறிலும், ஜீவன, கர்ம ஸ்தானமான பத்திலும் அமைவதால் ஏற்படும் அமைப்பு பற்றியும் இவ்வியலில் அறியப்பட உள்ளது. கோள் வாரியான தணிக்கயைாளர்கள் குணங்கள் பற்றியும், பன்னிரு இலக்கினப்படியான தணிக்கையாளர் குணங்கள் பற்றியும் அறியப்பட உள்ளது.

### *2.1. கோள்களின் தொழில்களுக்கான விளக்கம்*

கணக்குத் தணிக்கையாளர் பணிக்கு காரகக் கோள்களாக புதன், சனி, குரு, சூரியன் ஆகியவை அறியப்பட்டுள்ளது. ஆகவே இக் கோள்களின் தொழில்கள் பற்றிய விளக்கம் தரப்பட்டுள்ளது. அவற்றில் தணிக்கைப்பணிக்கான தொழில் அமைப்புகளும் காணப்படுகின்றன.

#### *2.1.1. புதனின் தொழில்கள்*

சோதிடம், மருத்துவம், புத்தகம் வெளியிடுதல், எழுத்தாற்றல், நடனம், நாடகம், கல்வி சார்ந்த தொழில்கள், வியாபாரத்தில் அல்லது அரசியலில் இடைத்தரகர்கள், கணக்காளர், இரத்தினங்களை பரிசோதிப்பவர், சிற்பி, கைவினைக் கலைஞர்கள், மேடைப் பேச்சாளர் போன்ற தொழில்கள். [63]

[63] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 115

பசுக்களை மேய்ப்பவர், கற்றவர், சிற்பி. திறமையான கணக்காளர். திறமையான சோதிடர். [64]

புதன் பச்சை நிறத்தையும். வடக்கு திசையையும் குறிக்கும். கல் பச்சை. புதன் மூளை. வாய். நாக்கு. நரம்புகள் ஆகிய உறுப்புகளைக் குறிக்கும். மனவியாதிகள். நரம்பு தொடர்பான வியாதிகளைக் கொடுக்கும்.[65]

அறிவாற்றல். பேச்சாற்றல். அறிவுக்கூர்மை. கல்வியில் நிபுணத்துவம். கைத்தொழில்கள். உயர் பழப்புகள் படித்தல். அறிவியல் ஆராய்ச்சிகளில் ஈடுபடுதல். கணித ஆசிரியராதல். சோதிடக்கலை. மர்மக்கலைகளைப் பயிலுதல். மாஜிக் நிபுணர். எழுத்தாளர். பேச்சாளர். தட்டச்சர். வர்க்கறிஞர். எழுத்தாளர். பத்திரிக்கை நிர்வாகம். தபால் தந்தி அலுவலகத்தில் பணி. வியாபார நிபுணராதல். காசில்லாமல் தரகு. ஏஜென்சி முதலானவற்றில் வாய் சாமர்த்தியத்தாலேயே சம்பாதித்தல். [66]

பேச்சாற்றல். எழுத்துத்துறை. வியாபாரம். தனித்திறமையுடைய தொழில்கள். கைத்தொழில்கள். கணிதம். சோதிடக்கலை. சமயம். தரகுத்துறை ஆகியவற்றில் உள்ள ஆயிரக்கணக்கான தொழில்கள். [67]

கல்வி ஸ்தாபனம். நூல்நிலையம். டெலிபோன். தந்தி. தபால். தனித்திறனுடைய தொழில்கள். அரசாங்கத் தூதுவர். தூதரகம். வக்கீல். தணிக்கையாளர், கணக்கு தொடர்புள்ள வருமானவரி போன்ற வரி தொடர்பான துறைகள். பத்திரிக்கைத்துறை நிர்வாகம். எழுத்தாளர். நிருபர். புதைபொருள் ஆராய்ச்சி. புள்ளி விவர ஆய்வாளர் துறை போன்றவை. [68]

---

[64] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 70

[65] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 19

[66] மேலது.

[67] டி. விமலன் - தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு - ப. 03

[68] மேலது.

வழக்கறிஞர். வெளிநாட்டு தூதரகத்தில் தூதராக வேலை. தரகர். சொத்து கண்காணிப்பாளர். விமானி. சோதிடர். புத்தக விற்பனை. கதை. காவியமெழுதுதல். பேச்சாளர். இசை அமைப்பு. தொலைக்காட்சி. சினிமா. வானொலி அமைப்பு. சிரிக்க வைப்பவர். வியாபாரம். கணிதம். இசை. சிற்ப ஆசிரியர். நிருபர். பத்திரிக்கை ஆசிரியர். அச்சகம். வேதாந்தி. விண்ணியல் அறிவுடையவர். குத்துச்சண்டை. தபால்காரர். நடன அரங்கம் அமைத்தல். தர்க்க சாத்திரம். கணிணி. அலைபேசி. [69] பசுக்களை மேய்ப்பவர். கற்றவர். சிற்பி. திறமையான கணக்காளர். திறமையான சோதிடர் முதலியன புதனின் தொழில்களாகும்.. [70]

### *2.1.2. சனியின் தொழில்கள்*

திருடர்கள், வேலையாட்கள், அந்நிய நாடுகள், அன்னிய மனிதர்கள், அன்னிய மொழி கற்றல், வெளிநாட்டுப் பயணம், விவசாய உற்பத்தி, எண்ணெய், வாயு, இரும்பு தாதுக்கள், வேட்டையாடுபவர், யோகப்பயிற்சி, ஆபத்தான பொருட்கள், வறுமை, ஏழ்மை, கொடூரத்தனம், கால் ஊனம், ஏமாறுதல், ஒற்றுமையின்றி இருத்தல்.[71]

எண்ணெய் வியாபாரி, வேலைக்காரன், இழிவானவன், வேடன், இரும்பு வேலை செய்யும் கருமான் என்னும் தொழிலாளி.[72]

சனிக்கு கருப்பு நிறமும், மேற்கு திசையும் பிரீதி. அதிர்ஷ்டக்கல் நீலம். சனி முழங்கால், கணுக்கால், எலும்பு, பற்கள் ஆகிய உறுப்புகளை குறிக்கும். சனி பல் நோய், இளைத்த உடல், காசம், வாயுப்பிடிப்பு, மனோ பீதி முதலிய வியாதிகளை கொடுக்கும்.[73]

---

[69] டி. விமலன் - தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு - ப. 03

[70] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 70

[71] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 118

[72] ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 72

[73] டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 21

சாதகத்தில் சனி மிக நேர்த்தியாக அமையப் பெற்றால் உண்மை, நேர்மை, உழைப்பு, சிக்கனம், சாமர்த்தியம், துறவியாதல், ஞானியாதல் போன்ற உயர் குணங்களை கொடுக்கும்.[74] சனி இரும்பு சம்பந்தப்பட்ட தொழில், லாரி, சைக்கிள், நிலக்கரி ஏஜென்சி, எள், எண்ணெய், புண்ணாக்கு, கடுகு, உளுந்து, புளி ஆகிய பொருட்கள் வியாபாரம், சுரங்கத் தொழில், தோல் வியாபாரம், பழைய சாமான்கள் வியாபாரம், டிரைவர் வேலை, தோட்டி வேலை, எருமை, ஆடு, பன்றி வளர்ப்பு, மனித உரோமம், ஆட்டு உரோமம் தொடர்பான வியாபாரங்கள்.[75]

இரும்பு, பணி செய்தல், சுரங்கங்கள், பொருள் போக்குவரத்துத்துறைகள், கூலிக்கு பணி செய்யும் தொழில்கள். பெட்ரோலிலிருந்து வெளிப்படும் மற்ற பொருட்கள். கழிவுப் பொருட்கள், சுகாதார பணிகள், எண்ணெய் வகை, மரங்கள் பிற பொருட்களை எடுத்துக் கொள்ளுதல் ஆகிய இவற்றின் உட்பிரிவுகளாக உள்ள பல்வேறு துறைகளுக்கும் சனி காரகனாக அமைவார்.[76]

சிமெண்ட் மொசைக்கற்கள் தயாரிப்பு, விற்பனை, ஏற்றுமதி இறக்குமதி, ஸ்பெகுலேசன், கட்டிடத் தொடர்புள்ள தொழில்கள், ஆட்டோமொபைல், தார் ரோடு செப்பனிடுதல், நீல நிறப் பொருட்கள் வியாபாரம். மீன், இறால், கோழிப்பண்ணை அமைப்பு, நிர்வாகம். மின்சாரம், கேபிள், எலக்ட்ரிக் வயர், டெலிபோன், தந்தி, தபால்துறை தொடர்பானவை. ரயில்வே பார்சல், ஏர்லைன்ஸ் முதலியன.[77]

இரும்பு, எ.ஃ.கு, பிளாஸ்டிக், உலோகம் சம்பந்தப்பட்டவை. விவசாயம், மருத்துவம், கெமிகல், உரம், தொழிற்சாலை அமைப்பு, நிர்வாகம். யூனியன், ரெவின்யூ, கோர்ட், பஞ்சாயத்து, சிறைச்சாலை, பிரிண்டிங் துறை, தாசில்தார், மணியம், கர்ணம், லேபர் டிபார்ட்மெண்ட். எண்ணெய் வித்துக்கள், தோல், ரப்பர், பஞ்சு, சனல் கயிறு, பெட்ரோல், மண்ணெண்ணை. ஆயில் தொடர்புள்ள அனைத்தும். உளுந்து, எள்ளு போன்ற

---

74 டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 21

75 மேலது.

76 டி. விமலன் - தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு - ப. 04

77 மேலது.

தானியவகைகள், கரும்பு, வாழை, மா, பலா, வேம்பு, உயர்ரக தேக்கு, குறிப்பாக வெண்தேக்கு, சந்தனம் போன்ற டிம்பர் வகைகள் அனைத்தும். சமையல் எரிவாயு முதலியன சனியின் தொழில்களாகும்.[78]

### *2.1.3. குருவின் தொழில்கள்*

குரு உச்சமாக இருப்பவன் தலைவனாகவும். செல்வந்தனாகவும். அதிகாரம் உள்ளவனாகவும். மதிப்பு மரியாதை பெற்றவனாகவும். செல்வாக்குடையவனாகவும் இருப்பான். மதிப்புமிக்க ஆசிரியர்கள். [79]

சோதிடர். மந்திரி. குரு (ஆசிரியர்). சன்னியாசிகளுக்கு தலைமை ஏற்பவர். முக்கியஸ்தர். [80]

நிர்வாகம். அமைச்சரவை. நீதித்துறை. சமயம் சார்ந்துள்ள துறைகள். கல்வித் துறை. பணம் தொடர்பான துறைகள். அலுவலகப் பணிகள். கருவூலம். அறக்கட்டளைகள். வங்கித்துறைகள். பல்கலைக்கழகங்கள் ஆகிய துறைகளின் பிரிவுகளில் உள்ள எண்ணற்ற துறைகளும் குருவின் காரகமாக அமையும். [81]

பெரிய மனிதத்தன்மை. தயாள குணம் மதிப்பான செய்கைகள். பெரும் அதிர்ஷ்டசாலியாக இருத்தல். எக்காரியத்திலும் சுலபமாக வெற்றியடைதல். தொழில் வியாபாரங்களில் உன்னதமான மேன்மைகளை அடைதல். செல்வம் பெருகிக்கொண்டே போதல். எப்பொழுதும் மகிழ்ச்சியாயிருத்தல். தர்மகர்த்தாவாதல். கோயில் திருப்பணிகள் நடத்துதல். மதப்பிரசங்கம் செய்தல். உபந்யாசம் செய்தல். மதத்தலைவர். கோவில்

---

78 டி. விமலன் - தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு - ப. 04

79 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 116

80 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 70

81 டி. விமலன் - தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு - ப. 03

அர்ச்சகர். ஆளுநர். மந்திரி. ஆட்சித்தலைவர். வழக்கறிஞர். வங்கி மேளாளர். வங்கிக் கணக்கர். வட்டிக்கு பணம் கொடுத்தல் ஆகியவை குருவின் தொழில்கள். [82]

குரு புத்திர காரகனாதலால் குருவைக் கொண்டு புத்திரர் உண்டா இல்லையா என்பது. புத்திரர் மேன்மை. புத்திரர்களால் நிம்மதி அல்லது தொல்லை ஆகியன பற்றி ஆராயலாம். [83] மந்திரி. அமைச்சரவை. கஜானா. அரசாங்க அதிகாரி. நீதிமன்றம். நீதித்துறை சம்பந்தப்பட்டவை. நீதிபதி. மதபோதகர். மதஸ்தாபனம். கோவில் சம்பந்தப்பட்ட அனைத்தும். ஆன்மீகம். சீட்டுக் கம்பெனி. பைனான்ஸ். பொன். பொன்நகை தொடர்பான துறை. பட்டு. ஜவுளி. உணவுப் பொருட்கள். மஞ்சள். சீரகம். மஞ்சள் நிறப் பொருட்கள். நவரத்தினங்கள். கரும்பு. கரும்பு ஆலை உற்பத்தி. [84]

ஆசிரியர். ஆச்சாரியார். பேராசிரியர். ஆராய்ச்சியாளர். பொருளாளர். வங்கிக் காசாளர். மடாதிபதி. மந்திரி. நீதிபதி. வக்கீல். சட்டமன்ற உறுப்பினர். மக்கள் மன்ற உறுப்பினர். கணக்கு ஆடிட் வல்லுநர். ஐ.ஏ.எஸ். ஐ.ஏ.ஏ.எஸ். ஹிப்நாடிக் நிபுணர் முதலியன குருவின் தொழில்களாகும்.. [85]

### *2.1.4. சூரியனின் தொழில்கள்*

சிவ வழிபாடு செய்யும் சைவ சமயத்தினர், மருத்துவன், அரசன், யாகம் செய்பவன். [86] வங்கிகள், பொற்கொல்லர், மருத்துவர், அரசாங்கப்பதவிகள், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பதவிகள், கோயில்கள், தேவாலய பணிகள்.[87] நாட்டாண்மை, பஞ்சாயத்து பிரசிடெண்ட், சேர்மன், மேயர், எம்.எல்.ஏ, மந்திரி, அதிகாரமுள்ள அரசு பதவிகள் வகித்தல், அரசால் சலுகைகள், அனுகூலம் பெறுதல் அல்லது

---

82 டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 19

83 மேலது ப. 20

84 டி. விமலன் - தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு - ப. 03

85 மேலது.

86 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி - ப. 111

87 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 66

தொந்தரவுகளுக்கு ஆளாகுதல், மருந்து சாப்பிடுதல், மருந்துக்கடை, டாக்டர் படிப்பு, டாக்டர் தொழில் சிறப்படைதல், தங்க வியாபாரம், பொற்கொல்லர் தொழில் ஆகியவை சூரியனின் தொழில்கள். [88]

வர்த்தகம், வியாபாரம், அரசாங்கம், அரசியல், புதைபொருள் ஆராய்ச்சி, ரயில்வே தொழிற்சாலை அமைத்தல், நிர்வாகம், விநியோகம், மருத்துவம், ஆன்மீகம், இராணுவம், யுத்தம் செய்தல். [89] அரசாங்கத் தொழில், கணக்கு விவகாரம், வக்கீல், நீதிபதி, காய்கறி, பழம், கிழங்கு விவசாயம், சக்திபூசை செய்தல், யோகம், ஓமம் செய்தல், வேத விற்பன்னர், அரசியல்வாதி, மந்திரி, பணம் காசு அச்சடிக்கும் தொழில், தங்கம் செம்பு வியாபாரம், நவரத்தினம் மதிப்பீடு செய்யும் தொழில் முதலியன சூரியனின் தொழில்களாகும். [90]

### *2.1.5. சந்திரனின் தொழில்கள்*

நீர், நீர் தொடர்பான தொழில்கள்.[91] விவசாயி, நீர்வாழ் உயிரினங்களால் வாழ்க்கை நடத்துபவர்.[92] டீக்கடை, ஓட்டல்கடை, சர்பத்கடை, மதுக்கடை, சலவைத்தொழில், கறவைமாடுகள், பால், தயிர், மோர், வெண்ணெய் வியாபாரம், முத்து வியாபாரம், மீன் வியாபாரம், உப்பு வியாபாரம், கடற்படையில் சேருதல், கடற்பயணம், மாலுமியாதல், படகோட்டுதல், எழுத்தாளர், கவிஞர், பொதுஜனத் தொடர்பு அதிகாரியாகப் பணி. வெள்ளி வியாபாரம், ஈயம் பூசுதல், அரிசி வியாபாரம்.[93]

வேளாண்மை, வெள்ளி, பஞ்சு, நூல், உணவு, துணி. மீன்பிடித்தல், குளிர்பானம், வெற்றிலை பாக்கு, படகு, கப்பல், பால், மதுவகை, பெட்ரோல், நீர் தொடர்பான

---

88 டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 16

89 டி. விமலன் - தொழில் முனைவோர் சாதகப் பகுப்பாய்வு - ப. 02

90 மேலது.

91 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - ஜோதிஷ வித்யா வாரிதி. ப. 112

92 ஏ. சுப்பிரமணிய சாஸ்திரிகள் - பலித ஜோதிஷம் - ப. 67

93 டி. விமலன் - சாதகப் பலன்களை வரையறுத்தல் - ப. 7

தொழில்கள், கதை, கவிதைத் துறைகள் ஆகியவற்றின் தொடர்பான பல்வேறு துறைத் தொழில்களும் சந்திரனிற்குரியது.[94]

